இனப்பிரச்னை விவகாரத்தில் ஐ.நா. தலையிடுமாறு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

[illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 4 இதழ் 184
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20 8 1993

மேற்கு நாடுகள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்காக இலங்கை அரசும் - விடுதலைப்புலிகளும் உடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு ஐ. நா. செயலர், இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று அமெரிக்கா, பிரான்ஸ், நோர்வே, பெல்ஜியம் ஆகிய நான்கு நாடுகளும் கூட்டாக ஐ. நா. செயலரிடம் வலியுறுத்தியுள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

கைதானோர் விடுதலை பற்றி நீதித்துறை ஆராய்கிறது

அமைச்சர் ஹேரத்

(கொழும்பு)

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டோருக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் வரையில் அவர்களை விடுவிப்பது சம்பந்தமான சாத்தியக்கூறுகளை நீதித்துறை ஆராய்ந்து வருவதாக நீதி அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் மாத்

(4-ம் பக்கம் பார்க்க)

சமூகநீதியைநிலைநாட்டுவதற்கு நேர்மையுடன்செயல்படுங்கள்

நீதியாளர் சட்டவாளர் மத்தியில் தலைவர் பிரபாகரன் உரை

(யாழ்ப்பாணம்)

"தனிப்பட்ட உணர்வுகளுக்கும் பந்தபாச உறவுகளுக்கும் இடமளியாது நேர்மையுடன் பிரச்னைகளை அணுகி சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும். இலட்சியப் போராளிகளாகிய உங்களிடமிருந்து தக்கு நீதியும் நியாயமும் கிடைக்குமென மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் கண்ணியத்துடனும் செயற்பட்டு சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்.

இவ்வாறு தமிழீழத் தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் தமிழீழ நீதித்துறையின் நீதியாளர் சட்டவாளர் ஆகியோரின் சத்தியப்பிரமாண வைபவத்தில் உரையாற்றும் போது கூறினார். தமிழீழ சட்டக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்ட நீதிபாளர்களும் சட்டவாளர்களும் நேற்று தலைவர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். இந்த வைபவத்தில் தேசியத் தலைவர் கருத்துரை வழங்கும்போது மேலும் கூறியதாவது; "இன்றைய தினம் எமது இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய தினமாகும். இன்றைய தினத்

(4ம் பக்கம் பார்க்க)

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் முன்னிலையில் நீதியாளர் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்வதை படத்தில் காணலாம், நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பராவும் அருகில் காணப்படுகிறார்.

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும்

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த அரசு முடிவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடாத்த அரசாங்கம் முடிவு எடுத்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் ஆர் கே. சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இந்தத் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் உத்தியோகத்தர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

ஜனகபுர ராணுவமுகாம் தகர்ப்பு:

ராணுவத்தினர் மீது நீதிமன்ற விசாரணை

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை ஜனகபுர இராணுவ முகாம் பொறுப்பாளரின் கவனயீனத்தினாலேயே இந்தமுகாம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி அழிவுக்குள்ளானது. இந்த அதிகாரி மீது எதிராக நீதிமன்ற

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ். குடாவில்

இராணுவம் மீது புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்

(கொழும்பு)

யாழ். குடா நாட்டின் இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொண்டுவருவதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் நேற்று

(4ம் பக்கம் பார்க்க)

யுத்தக்கைதிகள் விவகாரம்:

உறவினர் அரசுக்கு எதிராகப் போராட்டம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகள் விவகாரத்தில் அரசு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததைக் கண்டித்து கொழும்பில் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் அரசுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு நூதனசாலையில்

புத்தரின் தங்கச் சிலைகள் திருட்டுப்போயின

(கொழும்பு)

கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டிருந்த புத்தரின் இரு தங்கச்சிலைகள் நேற்று களவாடப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நூதனசாலையின் மேல்கூரை வழியாக திருடர் உள்ளே புகுந்து பல நூற்றாண்டு காலம் பழமை வாய்ந்

(4ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவுப் பகுதியில்

விமானத் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று அதிகாலை 5-40 மணியளவில் இரு சியாமாசெட்டி குண்டு வீச்சு விமானங்கள் பலத்த குண்டு தாக்குதலை மேற்கொண்டன.

புதுக்குடியிருப்புப் பகுதியை நோக்கி 8 குண்டுகள் விமானத்திலிருந்து வீசப்பட்டன. இத்தாக்குதலினால் ஏற்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். வீ. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-251)

விற்பனைக்கு

8' 9' 12' தூண்களும், 8' 6' தாரங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. பொன்னையா, வடலியடைப்பு. (சி-398)

தேவை

பத்திரிகை ஸ்தாபனத்தில் கடமை புரியக்கூடிய அச்சுக்கோப்பாளர் தேவை. தகுதியும், அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன: விண்ணப்ப முடிவு திகதி; 25-8-93 தொடர்பு:- விளம்பர இலக்கம்: 3351, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். எ-3351

ஆண்டு-4 பரீட்சை

ஆண்டு 4 திறப் புலமைப் பரிசில் பரீட்சை (1994) மாதிரிப் பரீட்சை 22-08-93 ஞாயிறு மு. ப. 8-00, 11 மணி நேரங்களில் நடைபெறும். வகுப்புகள் மாணவரின் தரத்திற்கேற்ப செவ், வியா, சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறுகின்றன. குறிப்பிட்டளவு மாணவர் அனுமதிக்கப்படுவர். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-413)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

குரு முதல்வராக நியமனம்

(அரியாலை)

யாழ் மறைக்கோட்டக் குரு முதல்வராக அருள்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளும் கிளிநொச்சி மறைக் கோட்டக் குரு முதல்வராக அருள்திரு இம்மானுவேல் பயஸ் அடிகளும் பருத்தித்துறைமறைக்கோட்ட குரு முதல்வராக அருள்திரு பி. எம். இம்மானுவேல் அடிகளும் மானிப்பாய் மறைக் கோட்ட குரு முதல்வராக அருள்திரு ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (59)

பண்டத்தரிப்பு

கல்விக்கோட்ட கூட்டம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்கள், கல்விக் கழகப் பொருளாளர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று கோட்டப் பணிமனையில் எதிர்வரும் 25ம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் கழகத் தலைவர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு வரும்பொழுது 1991, 1992 ஆம் ஆண்டுகளில் தங்கள் கொத்தணியில் (பாடசாலை ரீதியாக) ஆசிரியர்கள் வழங்கிய நிதியின் விபரம் முத்திரை விற்பனை வரவு (பாடசாலை ரீதியாக) விபரம், மாணவர் மதிய உணவு முத்திரை மூலம் பெறப்பட்ட நிதி விபரம் ஆகிய விபரங்களைத் தவறாது கொண்டுவருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. (139)

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களுக்கு நூலகவசதி

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்பட்டு வரும் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களுக்கு நூல்நிலைய வசதிகள் செய்து கொடுக்கப்பட உள்ளன.

ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் நூல்நிலையங்கள் அமைப்பது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய கல்வி நிறுவனம் ஆரம்ப நடவடிக்கையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களுக்கு முதற்தொகுதி நூல்களை அண்மையில் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தம் பதினொரு தொலைக்கல்வி ஆசிரியர்பயிற்சி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. (109 - நி)

கலைப் போட்டிகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய ஆண்டு விழாவினை முன்னிட்டு பின்வரும் தினங்களில் கலைப்போட்டிகள் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இம்மாதம் 22ம் திகதி காலை தனிப்பாடல் குழுப்பாடல் போட்டிகளும் மாலை கோலமிடல் ஓவியப் போட்டிகளும், 23ம் திகதி காலை பொது அறிவு, கட்டுரைப் போட்டிகளும், 25ம் திகதி மாலை சிறுகதை, கவிதைப் போட்டிகளும், 27ம் திகதி பிற்பகல் பேச்சு, கிராமிய சம்பாஷணைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (154)

மருந்துகள்

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார திணைக்களத்திற்கு 'குமண' கப்பலில் இவ்வருட மூன்றாம் காலாண்டுக்கான மருந்து வகைகளும் தடுப்பூசி மருந்து வகைகளும் இன்று கொண்டுவரப்படுகின்றன. —72

கிறீஸ்தவ சேவ ஆச்சிரமம்

மருதனமடம் - சுன்னாகம்

ஆச்சிரமத்தின்

54-ம் ஆண்டு விழா

இம்மாதம் 21ஆம் திகதி

சனிக்கிழமை நடைபெறும்.

நண்பர்கள் யாவரும்
அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

நிகழ்ச்சி நிரல்

காலை 7-00 மணிக்கு
பரிசுத்த நற்கருணை ஆராதனை
காலை 8-00 மணிக்கு
திருமுழுக்கும்
நன்றி செலுத்தும் ஆராதனையும்
காலை 10 00 மணிக்கு
கலந்துரையாடல்
நண்பகல் 12-00 மணிக்கு
மன்ருட்டு செபம்
மாலை 3-30 மணிக்கு
பகிரங்கக் கூட்டம்

உங்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள்.

வண. சேவக் சாமுவேல் தேவரட்னம் அல்பிரட்
(சாம் அண்ணன்)

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்,
மருதனமடம், சுன்னாகம். (சி-403)

கண்ணீர் அஞ்சலி

செல்வி லோகராணி கந்தையா B. A.

(நல்லூர் ப. நோ. கூ. சங்க வங்கிச்சேவை முகாமையாளரும், பதில் பொதுமுகாமையாளரும்)

தோற்றம்:
20-08-1944
★
மறைவு:
15 08 1993

நீங்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை
எடுத்தியம்பிய அறிவுரைகள்
சாவிலுதிர்த்த வார்த்தைகள்
கனிவான கண்டிப்புக்கள்
அன்பான உங்கள் அரவணைப்பு.
ஓ……… அந்த பசுமையான
நாட்களை எண்ணி வேகுகின்றோம்
உங்கள் நினைவுகள்
நீங்காத நினைவுகளாக
என்றும் எம் நெஞ்சமதில்
தொடர்ந்து வரும்

உங்கள் பிரிவால் துயருறும்:
சக பணியாளர்கள்.
(நல்லூர் ப. நோ. கூ. சங்கம்)
(எ-3357)

சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக அங்கீகரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக இயங்கவைப்பதற்கான அங்கீகாரத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடமும், பேரவை மூதவை ஆகியவையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளன இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியக்குழு வழங்கினால் மட்டும் இதனை அமுல்படுத்த முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதில் துணைவேந்தரும், கலைப்பீடாதிபதியுமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கருத்து வெளியிடுகையில்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முழுச்சமூகமும் இவ்விடயத்தில் ஒருமித்த கருத்தைக் கொண்டு செயற்படுகிறது. இதற்கான முடிவை பல்கலைக்கழக மானியக்குழுவே தீர்மானிக்கமுடியும் என்றார். (எஸ்)

தமிழ் அகதிகள் குடிசைகள் தீயில் எரிந்து நாசம்

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கையினால் வாழைச்சேனைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பொலநறுவையில் தங்கியிருந்த தமிழ் அகதிகளின் தற்காலிகக் குடிசைகள் அனைத்தும் நேற்று திடீர் தீவிபத்தில் எரிந்து நாசமாகிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பொலநறுவை மாணிக்கப்பிட்டிப் பகுதியில் தங்கியிருந்த மேற்படி அகதிகளின் 37 குடிசைகளும் தீயினால் முற்றாக சேதமடைந்தன.

இரவு நேரத்தில் இந்த தீவிபத்துச் சம்பவம் நடைபெற்றபோதிலும் இதில் எந்த வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லையென்றும் அகதிகளின் உடைமைகள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பலாகிவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

காரைநகர் மாதகல் ராணுவம்மீது புலிகள் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மற்றும் மாதகல் இராணுவ நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் மாதகல் இராணுவத்தினர் மீதும் நள்ளிரவு 12-20 மணியளவில் காரைநகரில் நிலைகொண்ட படையினர்மீதும் விடுதலைப் புலிகள் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர்.

படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் தெரியவில்லை.

இதே வேளை தெல்லிப்பளையில் நிலைகொண்ட இராணுவத்தினர் நேற்று அதிகாலை மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் —வ

இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் விளையாட்டுக்கழகங்களிடையே நடைபெறவிருக்கும் 11பேர் கொண்ட உதைபந்தாட்டப்போட்டி இன்று மேற்படி கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய முதல்போட்டியில் குருநகர் பாடுமீன் 'பி' கழகமும், கலைவாணி கழகமும் மோதும். 2வது போட்டியில் கிறெஸென்றியன்ஸ் கழகமும் - ஈச்சமோட்டை கழகமும் மோதும் (வி

மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் கட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு பல்கலைக்கழக பட்டப் படிப்பினை மேற்கொள்ளும் உள்வாரி மாணவர்களுக்கும், இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களுக்கும், பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் பின்வரும் நடைமுறைகளுக்கிணங்க தலா நான்கு லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் ரூபா 22/-வீதம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று 20ம் திகதி விஞ்ஞான பீட மாணவர்களுக்கும் 21-ம் திகதி வர்த்தக, முகாமைத்துவ மாணவர்களுக்கும், 23ம் திகதி சித்த மருத்துவ, இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கும், 28ம் திகதி மருத்துவபீட மாணவர்களுக்கும், 30ம் திகதி கலைப்பீட மாணவர்களுக்கும், 24ம் திகதி ஊழியர்களுக்கும் விநியோகிக்கப்படும். (வி)

செய்திச்சிதறல்

மரக்கறிச்சந்தை

(நெல்லியடி)

சுமார் ஏழு வருடகாலமாக பருத்தித்துறை மருதடியில் நடைபெற்றுவந்த மரக்கறிச் சந்தை, நேற்றுக் காலை முதல் பருத்தித்துறை பழைய பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (160)

சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தீர்வு 1992ஆம் ஆண்டில் தோற்றிய சகல மாணவர்களுக்கான பெறுபேற்றுச்சான்றிதழ் சகல கல்விக் கோட்டங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சகல அதிபர்களும் தங்கள் பாடசாலை மாணவர்களின் பெறுபேற்றுச் சான்றிதழ்களைப் பெற்று வழங்குமாறு தேர்வுச் சபையினர் கேட்டுள்ளனர்.

விளையாட்டு போட்டி

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் 42வது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் 431 புள்ளிகளையும், பாரதி இல்லம் 426 புள்ளிகளையும், கம்பர் இல்லம் 420 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (71)

வேண்டுகோள்

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் சாதாரண விலையில் சைக்கிள் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (72)

மணிவாக்கு

வம்பை விலைக்கு வாங்கவும் வேண்டாம். விற்கவும் வேண்டாம்.

— செஸ்டர் பீல்ட் பிரபு

நமது நோக்கு

இடைக்கால நிர்வாகம்

வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் அமைக்கும் புதிய திட்டம் ஒன்றைச் சபாநாயகர் ஜனாப் முகமட் முன்வைத்துள்ளார்.

உள்நாட்டுப்பிரச்சினையை நாடாளுமன்றத் தெரிவுக் குழு தீர்த்துவைக்கும் என நோபல் பரிசு பெற்ற குழுவினருக்குக் கடிதம்எழுதிய மை காயு முன்பே புதிய திட்டம் சபாநாயகரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இதன் அர்த்தம் என்ன? நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தெளிவான சிந்தனை இல்லை; உருப்படியான திட்டம் இல்லை.

நோயைத் தீர்ப்பதற்கு, நோய்க்கான மூலகாரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப மருந்து கொடுத்தல்தான் முறை

வட்டைப் பாறையை விழுங்கியவனுக்கு சுக்கு நீர் கொடுத்தல் மாதிரி, இடைக்கால நிர்வாகசபை யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

"ஐ.தே. கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்து கொண்டு, வட-கிழக்குப் பகுதிக்கு மாத்திரம் நிர்வாக சபைக்குச் சகலகட்சிகளையும் பங்குபற்ற வருமாறு அழைப்பு விடுப்பது கேலிக் கூத்தாகும்!" என சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசநாயக்கா கண்டித்திருக்கிறார்.

ஆளும்கட்சியின் நழுவல் திட்டம் என்றே அவர் இதனை வர்ணித்துள்ளார்.

பிரச்சினைகளை உரியவர்களோடு பேசித்தீர்க்காது, எதிர்க்கட்சியினரின் நிர்வாகத்தோடு வடகிழக்கில் போரை நீடிப்பதே அரசின் நோக்கம் என அரசியல் கண்ணோட்டக்காரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமாயின், அதற்குரிய நல்ல சூழலை உருவாக்க வேண்டும். யுத்தச் சூழல் பயங்கரத்திலிருந்து மக்கள் விடுபட வேண்டும். யுத்த நிறுத்தம் அறிவிக்காது, நிர்வாகம் பற்றிய சிந்தனையை உருவாக்க முடியாது.

பொருளாதாரத் தடையை அகற்றாது, உரிய சூழலை உருவாக்காது; நிர்வாகத்தோடு ஒத்துழைக்கும்படி மக்களைக் கேட்பது நியாயமாகுமா?

வெளிநாடுகளின் நெருக்குதல்களால், அரசு திணறியுள்ளது; எனவேதான் தெளிவற்ற திட்டங்கள் வருகின்றன

சலிப்புற்ற வீரர்கள், பந்தினை நேரே இலக்குக்கு அடியாது, அங்குமிங்கும் அடிக்கும் காட்சிதான் நினைவுக்கு வரும்!

ஜெர்மனியில்
வேலையில்லா திண்டாட்டம் வெளிநாட்டவர் பாதிப்பு

(பொன்)

மேற்கு ஜெர்மனியுடன் கிழக்கு ஜெர்மனி இணைக்கப்பட்டு ஒருநாடாகியபின் ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னரே அபிவிருத்தி யடைந்திருந்த மேற்கு ஜெர்மன் பகுதிக்கு, கிழக்குப் பகுதியிலிருந்து பல இளைஞர்கள் படையெடுக்கிறார்கள்.

கிழக்குப் பகுதிக்கும் பாரிய தொழில் நிறுவனங்களை அமைத்து நிலைமையைச் சமாளிக்க அரசு முயற்சித்து வருகிறது.

இதேவேளை வேலையற்று இருக்கும் இளைஞர்கள் வெளிநாடுகளிலிருந்து இங்கு அகதிகளாக வந்து தொழில் புரியும் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவது ஜெர்மன் அரசுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துவருகிறது. (ரே)

சுருக்கெழுத்தாளர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து நடத்தும் சுருக்கெழுத்தாளர் பயிற்சி ஆரம்ப வைபவமும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்தும், தனித்தும் நடாத்திய சுருக்கெழுத்தாளர் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 22 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அல்வாய் இன்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக
சென்னையில் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கை பிரச்னை தீரும் வரை தாயகத்திற்கு திருப்பி அனுப்ப வேண்டாமெனக் கோரி முன்னாள் இந்திய உயர் நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி வேட்பாளருமான திரு. கிருஷ்ண ஐயர் உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

இதேவேளை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக் கூடாதென கோரி வேறு பல தொண்டர் நிறுவனங்கள் மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் செய்திகளை அனுப்பியுள்ளன

எனினும் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் முயற்சி தடைப்படாதென மத்திய அரசு கூறியுள்ளது. (இ)

பொருண்மிய கழக
கண்காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் பொருண்மிய கண்காட்சியானது மக்கள் பார்வையிடுவதற்கு வசதியாக எதிர்வரும் 21-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சுயசார்புப் பொருண்மிய நகர்விற்கான முயற்சிகளை விரிவாக எடுத்து விளக்கும் இக்கண்காட்சியானது மாணவர்கள், கல்வி மான்கள், பொருளியலாளர்கள், ஆர்வலர்கள், நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுடையோருக்கும் பெரும் பயன் விளைவிப்பதாக அமைந்துள்ளது. (இ)

இடம்பெயர்ந்துள்ள
மீனவர் குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணம்

(தாளையடி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினால் வடமராட்சி கிழக்கில் உள்ள தற்காலிக வதிவிடக் குடிசைகளில் வசிக்கும் இடம் பெயர்ந்த சுமார் 331 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் பொருட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் சுமார் எண்ணாயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் நீண்டகாலக் கடன் அடிப்படைத் திட்டத்தில் வழங்கப்படவிருக்கின்றது.

கடந்த ஆண்டு நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது வடமராட்சி கிழக்குப் பகுதிக்கும் விஜயம் செய்து தற்காலிக வதிவிடக் குடிசைகளில் வதியும் கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சந்தித்தபோது அவர்கள் விடுத்த கோரிக்கையின் பேரிலேயே இத்திட்டத்திற்கான பணத்தை ரூபா நாற்பத்திரண்டு இலட்சத்தை யாழ்ப்பாணக் கிளைக்கு வழங்கியிருந்தனர்.

இதனைவிட யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெயர்ந்து தற்காலிக வதிவிடக் குடிசைகளில் தங்கியுள்ள சங்கானைப் பிரிவில் 154 குடும்பங்களுக்கும், சாவகச்சேரியில் 236 குடும்பங்களுக்கும், பருத்தித்துறைப் பிரிவில் 48 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழை பிரிவில் 15 குடும்பங்களுக்கும், உடுவில் பிரிவில் 44 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரிவில் 44 குடும்பங்களுக்கும், நல்லூர் பிரிவில் 16 குடும்பங்களுக்குமாக 907 குடும்பங்களுக்கு நீண்ட காலக் கடன் அடிப்படையில் கடற்றொழில் உபகரணங்கள் இம்மாத முடிவில் வழங்கப்பட இருக்கின்றன. (163-ரி)

இராசிபலன்

20-08-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 04)

திருதியை மாலை 6-46 வரை, உத்தரம் மு. இ. 7-46 வரை, சித்தாமிர்தயோகம் இராகுகாலம் காலை 10-35 முதல் 12-05 வரை, சுப நேரம் காலை 6-05 முதல் 7-35 வரை.

மேடம்: மனதுக்கினிய சம்பவம், கணவன் அனுகூலம், பணவரவு.

இடபம்: மனவேற்றுமை, தொழில் பாதிப்பு, வயிற்றில் ரோகம்.

மிதுனம்: குடும்ப விவகாரம் பணக் கஷ்டம், சகோதரர் கவலை.

கடகம்: தொழில் முன்னேற்றம், பேச்சுவன்மை, பயண அனுகூலம்.

சிங்கம்: நோக்கம் நிறைவேறுமை, இருப்பிட மாற்றம், கவலை.

கன்னி: போதுமான வருவாய், புதிய முயற்சி, சுபகாரியம்.

துலாம்: சூடான வார்த்தை குடும்ப பிரிவு, மனப்போராட்டம்.

விருச்சிகம்: காரிய சித்தி, அதிகாரிகள் நன்மை, வெகுமதி.

தனுசு: மனைவி சகாயம், தொழில் லாபம், மறைமுக உதவி

மகரம்: உறவினர் விரோதம், அலைச்சல், அகால போஜனம்.

கும்பம்? வெட்டிப் பேச்சுடன் தொல்லை, மனசஞ்சலம்.

மீனம்: அறிஞர் பாராட்டு, தொழில் உறவு, தாயார் மகிழ்ச்சி.

ஜோஸ்யர்

எகிப்திய அமைச்சர் மயிரிழையில் தப்பினர்

(கெய்ரோ)

எகிப்திய உள்துறை அமைச்சர் நேற்று முன்தினம் முஸ்லிம் போராளிகள் நடத்திய துப்பாக்கிச் சூடு, குண்டுத்தாக்குதல்களிலிருந்து படுகாயமடைந்து மயிரிழையில் உயிர் தப்பினர்.

மத்திய கெய்ரோ நகரில் எகிப்திய உள்துறை அமைச்சர் ஹசன் அல் அபீர் தனது இல்லத்திலிருந்து காரியாலயத்திற்கு செல்லும் வழியில், திடீரென அவர் சென்ற கார் மீது குண்டு வீசப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

முஸ்லிம் தீவிரவாதிகள் மேற்கொண்ட இத்தாக்குதலில் 4 பேர் பலியாகியும் மற்றும் பலர் படுகாயமடைந்த போதும் அமைச்சர் காயத்துடன் உயிர் தப்பியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக 245 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (கே-இ)

ஆண்டு விழா

(உடுவில்)

மருதனாமடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் ஐம்பத்திநான்காவது ஆண்டு நிறைவு விழா நாளை 21-ம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

அன்று காலை ஏழு மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகும் விழா பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறும் பகிரங்க கூட்டத்துடன் முடிவடையும். -109

அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மணிக்கூட்டு வீதியிலுள்ள அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவங்கள் நாளை 21ம் திகதிசனிக்கிழமைதொடக்கம் பத்து நாட்களுக்கு நடைபெற உள்ளன. இதில் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவாமி புதிதாக அமைக்கப்பட்ட கேடயத்திலும் 31ம் திகதி செவ்வாய்க்கிழமை பூந்தண்டிகையிலும் வலம் வருவார்.

இன்று

(நெல்லியடி)

கும்பளை மத்தி சனசமூக நிலையம் நடாத்தும் நிஷாந்தன் பாலர் பாடசாலை ஆரம்ப ஆண்டுவிளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பும் இன்று வெள்ளிக்கிழமை 20-ம் திகதி கும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (160)

பிறப்பு

அத்தாட்சி பத்திரங்கள்

(கொழும்புத்துறை)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 1991ம் ஆண்டு தொடக்கம் பிறந்த குழந்தைகள் உட்பட யாழ். நகர் மேற்கு பிறப்பு பதிவாளர் பிரிவில் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை யாழ். போதனா வைத்தியசாலைப் பிறப்புப் பதிவாளர் காரியாலயத்தில் நேரில் வந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1993 ஜூன் மாதம் வரை பிறந்த சகல குழந்தைகளினதும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் முடிவடைந்த நிலையில் உள்ளதாகவும் மேற்படி வைத்தியசாலைப் பதிவாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

பொன்னாலை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் 23-ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 27-ம் திகதி சப்பரத் திருவிழாவும் அடுத்த மாதம் 7-ம் திகதி வேட்டைத் திருவிழாவும் 8-ம் திகதி தேர்த்திருவிழாவும் 9-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 10-ம் திகதி திருக்கல்யாணமும் இடம் பெறும். (சி)

★

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 20ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் ச. சண்முகலிங்கம் தலைமையில் மேளக் கச்சேரி நடைபெறும். நாதஸ்வரம் க. துரைராசா, கி. ஆனந்தராசா, தவில் இ. திவ்வியநாயகம், க. பட்டு.

கௌரி நாராயணி, நமஸ்காரம்

சர்வமங்களங்களிலும் மங்களமாய் இருப்பவளே!
சிவபத்தினியே! சர்வ காரியங்களையும் சாதிப்பவளே!
சரணமடையத் தக்கவளே! முக்கண்களை உடையவளே!
கௌரி! நாராயணி! உனக்கு நமஸ்காரம்.

— துர்க்கா சப்தசுலோகி.

(இன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் 2ம் நாள் உற்சவம்)

கனிய மரங்கள் நட்டிடுவீர்
கனிவுடனே காத்திடுவீர்!

தனியார் வர்த்தகர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

'ருகுணு' கப்பலில் மண்ணெண்ணெய் அனுப்பிய தனியார் வர்த்தகர்கள் தவறாது இன்று 20ம் திகதி காலை 10 மணிக்கு யாழ் செயலக புனர்வாழ்வுத்திட்டப் பணிப்பாளரை செயலகத்தில் சந்தித்து இவற்றை எடுத்துச் செல்வதற்கான நடைமுறையை தீர்மானிக்கும்படி யாழ் செயலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

யுத்தக் கைதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடாத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கென வெகுஜன இயக்கம் ஒன்றை உருவாக்கும் பணியிலும் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது —க

கைதானோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை மாவட்ட அமைச்சர் என். ஏகநாயக்கா தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் விடுதலை தொடர்பாக எழுப்பிய பேட்டி ஒன்றுக்கு பதில் அளித்தபோதே அமைச்சர் மேற்படி தகவலைத் தெரிவித்தார். —இ

கிழக்கு மாகாணத்திலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் நியமனப்பத்திரங்களை கோருவார்கள். வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபை தேர்தல் அதிகாரி உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களைக் கோருவார்.

அடுத்தமாதம் 8-ம் திகதிக்கும் 10-ம் திகதிக்கும் இடையில் வேட்பாளர் நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

சுயேட்சைக் குழுக்களின் வைப்புப்பணம் அடுத்தமாதம் 30ம் திகதி நண்பகல் 12 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

மட்டக்களப்பில் மாநகர சபை, அம்பாறை, திருமலை, வவுனியா நகரசபைகள் 36 பிரதேசசபைகள் ஆகியவற்றில் தேர்தல்கள் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பில் 11 பிரதேச சபைகளும் அம்பாறைமாவட்டத்தில் 15 பிரதேச சபைகளும் திருமலை மாவட்டத்தில் 10 பிரதேசசபைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகதேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஸ)

இனப்பிரச்சினைக்கு ராணுவ தீர்வு காண்பது சாத்தியமல்ல

— யாழ் அரச அதிபர் பி. பி. ஸி. க்கு பேட்டி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை. அரசியல் ரீதியாக இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படலாமே ஒழிய இதற்கு இராணுவத்தீர்வு காண்பது சாத்தியமல்ல.

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பி. பி. ஸி. நிருபருக்கு தொலைபேசி மூலம் கொழும்பில் நேற்று வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாணத்தில் நிர்வாகம் மேற்கொள்வதற்கு சில கஷ்டங்கள் இருந்தாலும் விடுதலைப்புலிகள் ஒத்துழைப்புதருவதால் அதிக சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் பல காரியங்களை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது. பொது மக்களின் நன்மைகருதி எனக்கு பல ஆலோசனைகளை அவர்கள் தெரிவிப்பதுண்டு"

யாழ்குடா மக்களைப் பொறுத்தவரையில் அத்தியாவசிய மற்றும் மருந்துவகைகளைப் பொறுத்தவரையில் கடந்த மாதங்களைவிட இப்பொழுது கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

யாழ் மக்களைப் பொறுத்தவரையில் பிரதானமாக தேவைப்படுவது மண்ணெண்ணை இது விடயம் தொடர்பாக கூட்டுப்படை தலைமையகத்துடன் நான் தொடர்பு கொண்டு வருகிறேன்.

மருந்து வகைகளைப் பொறுத்தவரையில் பெருமளவு மருந்துகள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளன.

யாழ். பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஷெல் வீச்சு மற்றும் இராணுவ நடவடிக்கைகளினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது குறித்து அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளேன்.

கிளாலிப் பேச்சுவரத்துப் பாதை மிகவும் சிக்கலானது. வங்கி, தபால் சேவை போன்றவையும் நல்ல முறையில் இடம்பெறுவதால் நிர்வாகம் ஓரளவு இயங்குகிறது.

யாழ் பகுதியில் விடுதலைப் புலிகள் காவல் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளதால் பொது மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடியதாக உள்ளது.

யுத்தக் கைதிகள் விவகாரம் பற்றிக் குறிப்பிடுகையில் ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கை ஏற்படாததாலேயே இவ்விவகாரம் தோல்வியில் முடிவடைந்ததாக தெரிவித்தார்.

சர்வதேச சமாதானக் குழுக்கள் உட்பட மதக்குழுக்கள் விடுதலைப் புலிகளுடன் பலவேறு தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்திய போதிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பிரயோசனமான ஆலோசனைகள் இந்தக் குழுக்கள் மூலம் இதுவரை கிடைக்கவில்லை

அரசு விடுதலைப்புலிகளுடன் நேரடியாக பேசுவதன் மூலமாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்

அரசியல் தீர்வு ஒன்றை அரசே முதலில் முன்வைக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கருதுகின்றனர். —க

இனப்பிரச்சினை

(1ம்பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவா நகரில் தற்போது நடைபெற்றுவரும் ஐ. நா. சபையின் சிறுபான்மை இன பாதுகாப்பு இணைக்குழுவின் கூட்டத்தில் மேற்படி நான்கு நாடுகளும் வேண்டுகோளை விடுத்துள்ளதுடன், இலங்கை அரசுக்கு எதிராக கண்டனத் தீர்மானம் ஒன்றையும் இக்கூட்டத்தில் முன்வைத்துள்ளன

இலங்கை அரசினால் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட படுகொலைகள், கொடுமைகள், காணாமல்போனோர் போன்ற உரிமைமீறல் செயல்களை பாரபட்சமற்ற முறையில் விசாரணை செய்வதற்கு இலங்கை முன்வர வேண்டுமென்றும் இந்த நான்குநாடுகளும் தமது வேண்டுகோளில் வலியுறுத்தியுள்ளன.

இந்த நாடுகளின் கண்டனத் தீர்மானம் மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டால் ஐ. நா. சபையின் மனித உரிமை பாதுகாப்புக் குழு இலங்கையில் மனித உரிமை மீறல் குறித்து தீவிரமாக ஆராய்ந்து அறிக்கை வெளியிடவேண்டிய நிலை ஏற்படக் கூடும்.

இதனால் இலங்கை அரசு வருங்காலத்தில் சர்வதேச ரீதியில் பெரும் நெருக்கடிகளை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படக்கூடும் என அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இதேசமயம் இந்நான்கு நாடுகளும் இலங்கை அரசுக்கு எதிராக மேற்படி கூட்டத்தில் கொண்டுவந்த கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்காக இலங்கையின் புதிய வெளியுறவு அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீத் இலங்கையில் உள்ள வெளிநாட்டு ஸ்தானிகர்களுடன் பேச்சுக்கள் நடாத்துவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. —க

வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைத் தவணை விடுமுறைப் பிரயாண ஒழுங்கு பற்றி வெளிமாவட்ட ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நாளை 21ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் கல்வித்திணைக்கள வளவில் அமைந்துள்ள யா/சாதனா பாடசாலைமண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகல வெளிமாவட்ட ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

முல்லைத்தீவுப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேதங்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. —க

யாழ் குடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் தெரிவித்தார்.

ஷெல் வரும் திசையை நோக்கியே படையினர் திருப்பித் தாக்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்' (க)

ஜனகபுர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை ஒன்று நடத்தப்பட்டு அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் இந்த இராணுவமுகாமிலிருந்த ஏனைய இராணுவத்தினர் மீதும் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண தெரிவித்துள்ளார் -இ

கொழும்பு நூதனசாலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ததும், பெறுமதி வாய்ந்ததுமான இந்த இரு தங்கச் சிலைகளும் திருடியுள்ளன.

மேற்படி திருட்டு நன்கு திட்டமிட்டு நடாத்தப்பட்டதென்றும், இத்திருட்டில் வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் இந்த இரு சிலைகளும் வெளிநாடுகளுக்கு கடத்தப்படாமல் இருப்பதற்காக விமான நிலைய அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டிருப்பதாக பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். —வி

சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்குடா பரவைக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதேவேளை மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் பொலிசார் ஒருவர் பொறிவெடியில் சிக்கியதில் காலை இழந்தார். (க)

தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து நேற்று தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் தடியடிப்பிரயோகம் மேற்கொண்டதுடன் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

கிரிக்கெட்

இலங்கை 262/5

(கொழும்பு)

தென்னாபிரிக்க கிரிக்கெட் கோஷ்டிக்கும், இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் கோஷ்டிக்குமிடையில் குருநாகலில் நடைபெறும் 3 நாள் கிரிக்கெட் போட்டியின் 2ம் நாள் ஆட்டத்தின் முடிவில் இலங்கைக்கோஷ்டி நேற்று 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 262 ஓட்டங்களைப் பெற்றது

தென்னாபிரிக்கக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 335 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இன்று ஆட்டத்தின் இறுதிநாள் (வி)

சமூக நீதியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தமிழீழ நீதித்துறைக்கு அத்திவாரமிடப்பட்ட ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக இந்த சத்தியப்பிரமாண வைபவம் நடைபெற்றிருக்கிறது.

முன்பு பஞ்சாயத்து முறையில் கிராமிய இணக்க சபைகளை நிறுவி மக்களின் பிணக்குகளை தீர்த்து வைக்க எமது இயக்கம் முயன்றது. இன்று நீதித்துறையில் பயிற்சி பெற்ற போராளிகள் நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் உருவாக்கப்பட்டு செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை கட்டிஎழுப்பப்படுகிறது ஒரு சுதந்திரம் பெற்ற இறைமையுடையநாட்டின் அரச நிர்வாக அலகு போல் எமது நீதித்துறை உருவாக்கப்படுகிறது இது எமது போராட்டத்தின்பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது

நீங்கள் போராளிகளாக இருந்து நீதியாளர்களாக மாறியிருக்கிறீர்கள். எந்த இலட்சியப் பற்றுடன் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டீர்களோ அதேபோன்று திடமாக உணர்வுடன் பொறுப்புணர்வுடன் பயம்கலந்த எச்சரிக்கை உணர்வுடன் நீங்கள் உங்களது கடமையை செய்ய வேண்டும். கற்றது கைமண் அளவு கற்காதது உலகளவு என்பார்கள் இந்த உண்மையின் அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறைய கற்றுக் கொள்ள முயலவேண்டும். அனுபவமூலமாகவே நீங்கள் நிறைந்த அறிவை பெற்றுக்கொள்ளலாம்.

போராளிகள் நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் பொறுப்பை ஏற்று தமது பிரச்சினைகளை நேர்மையாக அணுகி சரியானமுறையில் நீதிவழங்குவார்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளிற்காக தமது உயிரையும் துறக்க தயாராக உள்ள இலட்சியவாதிகள் என்பதை எமது மக்கள் அறிவார்கள் எனவே போராளிகளாகிய நீங்கள் நீதி நிர்வாகத்தை பொறுப்பேற்கும்போது மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயலாற்றுவீர்கள் என நம்புகிறேன்

மக்களின்நாளாந்த பிரச்சினைகள் மனித உறவு பிரச்சினைகள், முரண்பாடுகள் ஆகியன உங்களுக்கு சிறிய பிரச்சினைகள் போன்று அர்த்தமற்றதாக தெரியும். ஆனால் மக்களுக்கு அவர்களது பிரச்சினைகள் பூதாகரமானதாக தென்படும். ஆகவே மக்களின் உணர்வுகளை புரிந்து அவர்களின் முரண்பாடுகளை களைந்து அவர்களுக்கு நீதி வழங்குவதை உங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். சில சமயங்களில் விமர்சனங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் ஆளாகவேண்டியும் ஏற்படலாம். ஆனால் எப்பொழுதும் நேர்மை தவறாது சத்தியத்தின் வழியில் நீங்கள் உங்களது கடமையை செய்ய வேண்டும் அதற்கான உறுதியும் துணிவும் உங்களிடம் இருக்கவேண்டும்.

இந்த நிகழ்வில் அரசியல் துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், நீதி நிர்வாகத் துறை பொறுப்பாளர் திரு. பரா, காவல்துறை பொறுப்பாளர் திரு நடேசன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு இளம்பரிதி, நிதர்சனப் பொறுப்பாளர் திரு ஜவான் ஆகியோரும் மற்றும் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

மரண அறிவித்தல்

திரு. சிதம்பரப்பிள்ளை கந்தசாமி

(நெல்லியடி ராணி மில்,
முள்ளியவளை செல்வம் மில் உரிமையாளர்)

திரு. சிதம்பரப்பிள்ளை கந்தசாமி 17-08-1993 செல்வம் மில் முள்ளியவளையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் காலமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 18-08-93 அன்று முள்ளியவளையில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. கிருஷ்ணகுமார்
(பெருமகன் சூரியா)

நெல்லியடி,
கரவெட்டி.

(இ-414)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B